**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.42/2020
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : மைக்கேல் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of December 2023.

20.12.2023

( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன் முன்னால் ராணுவ வீரர் ஆவேன். கடந்த 14.12.2019 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நான் எனது ஊரான கோடரேந்தலுக்கு வந்துகொண்டிருந்தபோது பரமக்குடியிலிருந்து தேரிருவேலி சாலையில் எங்கள் ஊர் அருகில் உள்ள வளைவில் கீழத்தூவல் போலிசார் நின்று விபத்து நடந்தது தொடர்பாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

2) அப்போது என்னிடம் போலிசார் நாங்கள் வந்ததற்கு சாட்சியாக இருக்க முடியுமா என்று கேட்டு என்னிடமும், ஜான் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவ இடத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த அன்றே நான் கையொப்பம் செய்தேன். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல்நிலையம் சென்று கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.